பக்கங்கள்: 05

# THEEMPUNAL தீம்புனல்

மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:54 | 19.01.2024 வெள்ளிக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2054

## மின்னணு தேசிய அடையாள அட்டைக்கு தகவல் சேகரிப்பு



ஜூன் மாதத்திற்குள் புதிய மின்னணு தேசிய அடையாள அட்டை தொடர்பான குடிமக்களின் பயோமெட்ரிக் தரவு சேகரிப்பு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இதனை பொது பாதுகாப்பு அமைச்சின் வளாகத்தில் நேற்று (18) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி கூறியதாக தெரிவிக்கப்படுகின்றது. புதிய ஐடியை அமுல்படுத்துவது தொடர்பான அடிப்படைப் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் அதற்கான உள்கட்டமைப்புகள் தற்போது தயாராகி வருவதாகவும் அவர் கூறினார். மேலும், குடிமக்களின் பயோமெட்ரிக் தரவுகள், கைரேகைகள் மற்றும் முகத்தை அடையாளம் காணுதல் தொடர்பான தரவுகள் சேகரிப்பு அனைத்து பிராந்திய செயலகங்கள் ஊடாக ஜூன் மாதத்திற்குள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## முல்லைத்தீவில் கரையொதுங்கிய இந்தியரின் சடலம்



முள்ளிவாய்க்கால் இராணுவ முகாம் அமைந்துள்ள கடற்கரை பகுதியில் இன்று (19) தெப்பம் ஒன்றில் மிதந்து வந்த நிலையில் சடலம் கரை ஒதுங்கியது.

தெப்பத்திலுள்ள கான்களில் இந்தியாவின் தெலுங்கு மொழி எழுதப்பட்ட அடையாளங்கள் காணப்படுகின்றன.

இந்நிலையில் உயிரிழந்தவர் இந்திய மீனவராக இருக்கலாம் என சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

## டயானாவிற்கு எதிரான மனுவை விசாரணை செய்ய அனுமதி



இராஜாங்க அமைச்சர் டயானா கமகே இலங்கை பாராளுமன்றத்தில் அமர தகுதியற்றவர் என தீர்ப்பளிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் அண்மையில் நிராகரித்தது. எனினும் அத்தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் இன்று (19) அனுமதி அளித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை பரிசீலித்த பிரிதி பத்மன் சூரசேன தலைமையிலான மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர் அமர்வு, இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

## இலங்கையில் அதிகரிக்கும் வைரஸ் காய்ச்சல்

இன்புளுவென்சா, அதனை ஒத்த வைரஸ் காய்ச்சல் அதிகம் பரவுவதாகவும், இருமல் இருப்பவர்கள் அது மற்றவர்களுக்கு பரவுவதைத் தடுக்க முகக்கவசம் அணிய வேண்டும் எனவும் வைரஸ் நோய்கள் தொடர்பான சுகாதார வைத்திய நிபுணர் வைத்தியர் ஜூட் ஜயமஹா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்புளுவென்சா மற்றும் அதனை ஒத்த வைரஸ் காய்ச்சலின் அறிகுறிகளாக காய்ச்சல், இருமல், தொண்டைப் புண், சளி அல்லது அடைப்பு, தசை அல்லது உடல் வலி, தலைவலி மற்றும் சோர்வு போன்றவைகள் ஏற்படலாம்.

# கண்டியில் புதிய இந்தியத் தூதுவர்



அஸ்கிரிய ,மல்வத்தை மகாநாயக்க தேரர்களான அதி வணக்கத்திற்குரிய மகாநாயக்க தேரர்களிடமும் வரகாகொட ஸ்ரீஞான ரதன மகாநாயக்க தேரர் அதி வண. முறையே திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல மகாநாயக்க தேரர் ஆகியோரிடம் உயர் ஸ்தானிகர் ஆசி பெற்றார்.

ஹந்தான தோட்டத்திற்குச் சென்ற உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இந்திய வீடமைப்புத் திட்டத்தை பார்வையிட்டார். இந்திய அரசாங்கம் ஏற்கெனவே மூன்றாம் கட்டத்தின் கீழ் தோட்டத்தில் 50 வீடுகளை நிர்மாணித்துள்ள நிலையில், திட்டத்தின் அடுத்த கட்டத்தில் மேலும் வீட்டு அலகுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. ஒட்டுமொத்தமாக, இந்திய அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு 14,000 புதிய வீடுகளை திட்டத்தின் இரண்டு கட்டங்களில் உறுதி செய்துள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் உடல் நலனை இலக்காகக் கொண்ட ஆயுர்வேத முகாம் ஒன்றையும் உயர்ஸ்தானிகர் ஆரம்பித்து வைத்தார். மேலும் தோட்டத்திலுள்ள பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு படிக்கும் பொருட்களையும், குடைகளையும் வழங்கினார்.

# பயிர்ச்செய்கை பாதிப்பு மதிப்பீடு ஆரம்பம்

இலங்கையில் நிலவிய அதிக மழை, வெள்ளப் பெருக்கால் பயிரிடப்பட்ட 61,000 ஏக்கர் நெற்பயிர் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நெல் சேத மதிப்பீடுகளை விரைவில் ஆரம்பிக்குமாறு கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பிரான்ஸ் அரசாங்கத்தின் சலுகைக் கடன் திட்டத்தின் கீழ் தங்கொடுவ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட பால் சார்ந்த உற்பத்தி தொழிற்சாலையை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மஹிந்த அமரவீர இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# நாரம்மலை துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

நாரம்மலை, தம்பெலஸ்ஸ பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இன்று (18) மாலை தம்பெலஸ்ஸ பகுதியில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் சாரதி நிறுத்தும் சமிக்ஞைக்கு இணங்காத லொறியை பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவொன்று துரத்திச் சென்றுள்ளது.

இதையடுத்து, பொலிஸார் லொறியை மடக்கிப் பிடித்து சோதனை செய்தனர். இருப்பினும், சோதனையின் போது, அதிகாரிகளில் ஒருவர் 'தற்செயலாக' துப்பாக்கியால் சுட்டதாகவும், டிரைவர் கொல்லப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய சப்-இன்ஸ்பெக்டர் கைது செய்யப்பட்டுள்ளார்.


கிருபா லேணர்ஸ்
කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS
அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.



அ.கிருபாகரன்
-அதிபர்-

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.



தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
விஸ்வமடு 021 320 1515
மன்னார் 023 225 1656
கிளிநொச்சி 021 228 5505
வவுனியா 024 222 7777

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# திறக்கப்பட்டது புதிய போர்முனை

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா வெளியேறிய தன் பின்னர் உலகளாவிய யுத்தம் முடிவடைந்ததாகக் கருதப்பட்டது. 2022 ஆம் ஆண்டு ரஷ்யா-உக்ரைன் போர், 2023 ஆம் ஆண்டு ஹமாஸ்-இஸ்ரேல் யுத்தம் உலகை அச்சுறுத்துகிறது. அந்த யுத்த ஈரம் ஆறுவதற்கிடையில் பாகிஸ்தானும், ஈரானும் மல்லுக்கட்டுகின்றன. பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள பல்வேறு இடங்களில் ஈரான் இராணுவம் அதிரடித் தாக்குதல் நடத்தியிருப்பது பரபரப்பையும், பதற்றத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

ஜெய்ஷ் அல் அதில் என்ற தீவிரவாத அமைப்பின் 2 முகாம்களைத் தாக்கி அழித்ததாக ஈரான் கூறியுள்ளது. ஈரானிலிருந்து ஏவுகணைகள் மூலம் இத்தாக்குதலை ஈரான் நடத்தியுள்ளது. ஈரானின் இந்த அதிரடித் தாக்குதலால் பாகிஸ்தான் அதிர்ச்சி அடைந்துள்ளது.

ஈராக், சிரியாவில் இஸ்ரேலிய நிலைகளைக் குறி வைத்து ஈரான் தாக்கிய அடுத்த நாளே பாகிஸ்தான் பக்கம் அது திரும்பியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஈரானின் செயலால் பிராந்தியத்தின் அமைதிச் சூழல் பாதிக்கப்படும் அபாயம் எழுந்துள்ளது. பாகிஸ்தான்-ஈரான் எல்லைப் பகுதியில், ஜெய்ஷ் அல் அதில் அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் அடிக்கடி ஈரான் இராணுவத்தினருடன் மோதலில் ஈடுபட்டு வந்தனர். இதனால்தான் அவர்களின் நிலைகளைத் தாக்கி அழித்துள்ளது ஈரான்.

இந்தத் தாக்குதல் குறித்து பலுசிஸ்தான் மாகாண தகவல் துறை அமைச்சர் ஜான் அச்சகாஸி கூறுகையில், இதற்கு நிச்சயம் பாகிஸ்தான் இராணுவம் பதிலடி கொடுக்கும் என்று நம்புகிறேன் என்று கூறியுள்ளார். இருப்பினும் பாகிஸ்தான் இராணுவத்தின் செய்தித் தொடர்புப் பிரிவு இதுவரை எப்பதிலையும் அளிக்கவில்லை. அதேசமயம், ஈரான் சர்வதேச விதிமுறைகளை, சட்டங்களை மீறும் செயலில் ஈடுபட்டுள்ளது. இது வன்மையாக கண்டிக்கத் தக்கது. இது கடும் விளைவுகளை ஏற்படுத்தும். இதை ஏற்க முடியாது என்று பாகிஸ்தான் வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது. அதேசமயம், ஈரான் வெளியுறவுத் துறை இதுவரை கருத்து தெரிவிக்கவில்லை.

ஈரான் இராணுவம், பாகிஸ்தான் பகுதிக்குள் புகுந்து தாக்கிய நிலையில் நேற்று, ஈரான் எல்லைக்குள் புகுந்து பாகிஸ்தான் இராணுவம் தாக்கியுள்ளது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே போர் மூளுமா? என்ற அச்சம் கிளம்பியுள்ளது. பாகிஸ்தானின் எல்லைப்புற மாகாணங்களில் ஏகப்பட்ட தீவிரவாத அமைப்புகள் இயங்கி வருகின்றன. இங்குதான் தீவிரவாதிகளுக்குப் பயிற்சி அளித்து அண்டை நாடுகளுக்கு அனுப்பி வருகின்றனர். இந்த தீவிரவாத முகாம்களால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடு என்றால் அது இந்தியாதான். காஷ்மீர் எல்லைப் புறம் வழியாக நடந்த தீவிரவாத ஊடுருவல்களுக்கு அளவே இல்லை. இப்போதுதான் சற்று அடங்கியுள்ளனர்.

இந்த நிலையில் இந்தத் தீவிரவாதிகள் தற்போது ஈரானுக்குள் புகுந்து கலவரம் செய்து வருவதால் ஈரான் நாடு ஆத்திரமடைந்துள்ளது. பலுசிஸ்தான் மாகாணத்தில் ஜெய்ஷ் அல் அதில் என்ற தீவிரவாத குழு இயங்கி வருகிறது. இந்த குழுவைச் சேர்ந்தவர்கள், ஈரானுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி வந்தனர். இதனால் கோபமடைந்த ஈரான் அதிரடியாக பலுசிஸ்தான் மாகாணத்தில் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதில் சிலர் கொல்லப்பட்டனர். இதனால் அதிர்ச்சி அடைந்தது பாகிஸ்தான். ஈரானுக்கு சரியான பதிலடி தரப்படும் என்று அது எச்சரித்திருந்தது. இந்த நிலையில் இன்று ஈரானுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளது பாகிஸ்தான். ஈரான் நாட்டின் பலுசிஸ்தான் மற்றும் பலுசெஸ்தான் மாகாணங்களின் எல்லையில் உள்ள சரவன் என்ற இடத்தை குறி வைத்து பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது.

பலுசிஸ்தான் விடுதலை முன்னணி மற்றும் பலுசிஸ்தான் விடுதலைப்படை ஆகிய இரு தீவிரவாத அமைப்புகளைக் குறி வைத்துத் தாக்குதல் நடத்தியதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. இந்த இரு அமைப்புகளும் சுதந்திர பலுசிஸ்தானம் கோரி போராட்டம் நடத்தி வரும் அமைப்புகள் ஆகும். பலுசிஸ்தானில் ஏற்கெனவே தனி நாடு கோரி போராட்டங்கள் நீண்ட காலமாக நடந்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. யுத்த கலாசாரம் அதிகரிக்கிறது, இவற்றைக் கட்டுப்படுத்துவது இலகுவானதல்ல.

# மன்னராட்சியை விமர்சித்தவருக்கு 50 வருட சிறைத்தண்டனை



தாய்லாந்து மன்னராட்சியை விமர்சித்த சியாங்ராய் வடக்கு நகரத்தில் உள்ள மேல்முறையீட்டு நீதிமன்றம், 30 வயதான முன்னாள் ஜனநாயக சார்பு ஆர்வலரான மோங்கோல் திரகோட்டுக்கு அவரது தனிப்பட்ட பேஸ்புக் கணக்கில் பதிவுகள் செய்ததற்காக 50 வருட சிறைத் தண்டனை விதித்தது.

கீழ் குற்றவியல் நீதிமன்றத்தால் 28 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் அவரது மேல்முறையீட்டின் போது மேலும் 11 குற்றச்சாட்டுகளில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டது, இது நீண்ட தண்டனைக்கு வழிவகுத்தது.

"மோங்கோல் திரகோட்டின் 27 முகநூல் பதிவுகள் தொடர்பாக 112 பேருக்கு மேல்முறையீட்டு நீதிமன்றம் 22 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது, மேலும் பூர்வாங்க நீதிமன்றம் ஏற்கெனவே வழங்கிய 28 ஆண்டு சிறைத்தண்டனையைத் தவிர. அவரது மொத்த சிறைத்தண்டனை 50 ஆண்டுகள்" என்று மனித உரிமைகளுக்கான தாய் வழக்கறிஞர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

# சந்திரனின் மேற்பரப்பில் ஜப்பானின் 'மூன் ஸ்னைப்பர்' லேண்டர்



நிலவில் தரையிறங்கும் ஐந்தாவது நாடாக மாறுவதற்கான இறுதி அணுகுமுறையில் ஜப்பான் உள்ளது, சந்திர நிலப்பரப்பின் மர்மங்களை அவிழ்ப்பதை மையமாகக் கொண்ட உலகளாவிய விண்வெளிப் பந்தயத்தில் சேர முயற்சிக்கும் போது அதிஷ்டத்தின் தலைகீழ் மாற்றமாக இருக்கும்.

அனைத்தும் திட்டமிட்டபடி சென்றால், நிலவை ஆய்வு செய்வதற்கான ஸ்மார்ட் லேண்டர் (ஸ்லிம்) வெள்ளிக்கிழமை நள்ளிரவில் (1500 ஜி.எம்) பாறை நிலவின் மேற்பரப்பில் இறங்கத் தொடங்கும், சுமார் 20 நிமிடங்கள் கழித்து கீழே இறங்கும் என்று ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனம் (ஜாக்சா) தெரிவித்துள்ளது.

# அவுஸ்திரேலியாவின் வட பகுதியில் கனமழை



அவுஸ்திரேலியாவின் வடக்குப் பகுதியில் கடுமையான மழை தொடர்ந்து பெய்து வருவதால், வடக்குப் பிரதேசத்தில் உள்ள தொலைதூர சமூகங்களை வெளியேற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளதால், குயின்ஸ்லாந்து குடியிருப்பாளர்கள் சில நாட்களுக்குள் மற்றொரு சூறாவளி தங்கள் கரையை அடையும் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றனர்.

வியாழன் இரவு டார்வினுக்கு தெற்கே சுமார் எட்டு மணிநேரம் உள்ள ஒரு குடியேற்றமான புறாஹோலில் இருந்து சுமார் 40 பேர் இடமாற்றம் செய்யப்பட்டனர் மற்றும் அருகிலுள்ள டகுராகுவில் மேலும் 50 பேர் கல்கரிண்ட்ஜிக்கு புறப்பட்டனர்.

# பாங்களாதேஷில் புற்றுநோய் அபாயம்

காலநிலை சீர்குலைவு பங்களாதேஷில் பல்லாயிரக்கணக்கான மக்களை அசுத்தமான கிணற்று நீரால் புற்றுநோயின் அபாயத்தை அதிகரிக்கும் என்று ஆராய்ச்சி கூறுகிறது.

கடல் மட்ட உயர்வு, கணிக்க முடியாத வெள்ளம் மற்றும் காலநிலை வெப்பமடைவதால் ஏற்படும் தீவிர வானிலை ஆகியவை நாட்டின் குடிநீரில் ஆபத்தான ஆர்சனிக் வெளியேற்றத்தை துரிதப்படுத்தும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதன் விளைவாக, ஆர்சனிக் நச்சுத்தன்மையின் விளைவாக மில்லியன் கணக்கானவர்கள் தோல், சிறுநீர்ப்பை மற்றும் நுரையீரல் புற்றுநோய்களைக் கொண்ட நாட்டில் ஏற்கெனவே ஒரு பொது சுகாதார நெருக்கடியின் தீவிரத்தை அதிகரிக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

## "கடவுள்தான் அனுப்பினாரா?" நூல் அறிமுகவிழா

அன்பின் பாதை எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ராணி சீதரனின் "கடவுள்தான் அனுப்பினாரா?" என்ற நூல் அறிமுகவிழா நாளை சனிக்கிழமை (20) மாலை 3.45 மணியளவில் அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக.தீபகாந்தன் தலைமையில் திருகோணமலை நகராட்சி மன்ற பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதம அதிதியாக ஓய்வு பெற்ற அதிபர் சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமலை நவம், சிறப்பு அதிதிகளாக வைத்தியலிங்கம் ஜெயச்சந்திரன், சிரேஷ்ட சட்டத்தரணி சுபாசினி சித்திரவேலு, இலங்கை மத்திய வங்கியின் கிழக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் க.பிரபாகரன், BN Holding Pvt Ltd, LK Group Financial நிதிக் கணக்காளர் தயாளலிங்கம் பிரசாதனன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூலின் அறிமுகம், நயவுரையை எழுத்தாளர் தில்லைநாதன் பவித்திரனும் நன்றியுரையை அன்பின் பாதை றொசில்டா அன்டன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.




## 15 மின்சாரசபை ஊழியர்கள் பணி இடைநீக்கம்

அண்மையில் நடைபெற்ற போராட்டத்தின் போது காசாளர் பணியிடம் மூடி மின் கட்டணம் செலுத்துவதற்கு இடையூறு விளைவித்த 15 காசாளர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின்சாரசபையை தனியார் மயமாக்கப் போவதாக அண்மையில் அதன் தொழிற்சங்கங்கள் எதிர்ப்புப் பிரச்சாரத்தை முன்னெடுத்திருந்தன.

மின்சார சபையின் நிர்வாகத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களை மீறும் வகையில் சேவைகளுக்கு இடையூறு விளைவிக்கும் ஊழியர்களை பணி இடைநீக்கம் செய்து உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்குமாறு மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர இலங்கை மின்சார சபை நிர்வாகத்திற்கு பணிப்புரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மீன்பிடி படகுகளுக்கு தீ வைத்த விஷமிகள்

புத்தளம் - உடப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆண்டிமுனை கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடி இயந்திரப் படகுகள், மீன்பிடி உபகரணங்கள், வலைகள் என்பன இனந்தெரியாதோரால் இன்று (19) அதிகாலை 1 மணிக்கும் 2 மணிக்கும் இடையில் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தீயில் நாசமாகிய வற்றின் பெறுமதி சுமார் இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் உடப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## கொழும்பில் ஆபத்தான கட்டடங்கள்

கொழும்பு நகரிலுள்ள 06 அடுக்குமாடி குடியிருப்புகள் உட்பட 08 கட்டடங்கள் அபாயகரமான சூழ்நிலை காரணமாக சீர் செய்ய அல்லது இடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகரம் தொடர்பான எதிர்காலத் திட்டங்கள் குறித்து அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி டொக்டர் ருவன் விஜயமுனி இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் 08 கட்டடங்கள் அபாய நிலையில் உள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

கெத்தாராம பரோன் ஜயதிலக்க கல்லூரி கட்டடம், ஜும்மா மஸ்ஜித் வீதி வீடுகள், திம்பிரிகஸ்யாய அபயராம மூன்று மாடி வீடுகள் உட்பட 06 அடுக்குமாடி குடியிருப்புகள் அடங்குகின்றன.

## மன்னாரில் போதை மாத்திரைகள் மீட்பு



மன்னார் தாழ்வுபாடு பகுதியில் உள்ள காணி ஒன்றில் போதை மாத்திரைகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக தாழ்வுபாடு கடற்படைக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் கடற்படையினருடன், தலை மன்னார் போதைப்பொருள் குற்றத் தடுப்பு பிரிவினர் இணைந்து காணியை சோதனையிட்டுள்ளனர்.

அப்போது காணியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 150 மில்லிகிராம் நிறை கொண்ட 24 ஆயிரம் போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளதோடு, சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரும், மீட்கப்பட்ட போதை மாத்திரைகளும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## IMF பிரதிநிதிகளை சந்தித்தார் சஜித்



சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவிற்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் சர்வதேச நாணய நிதியத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட செயற்பாட்டு பிரதானி பீட்டர் ப்ருவர் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவு எனக்கூறி தற்போதைய அரசாங்கம் VAT உட்பட பல வகையான வரிகளை சுமத்தி மக்களுக்கு அதிக வரிச்சுமையைக் கொடுத்து அதீதமாக அதிகரித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சுட்டிக் காட்டியுள்ளார்.

# ரோஹித் சர்மா உலக சாதனை




இப்போட்டியில் அடித்த 8 சிக்ஸர்களையும் சேர்த்து மொத்தம் 90 சிக்ஸர்களை கப்டனாக அடித்துள்ள ரோஹித் சர்மா சர்வதேச ரி20 கிரிக்கெட்டில் அதிக சிக்ஸர்கள் அடித்த கப்டன் என்ற இங்கிலாந்தின் இயன் மோர்கன் சாதனையை உடைத்து புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

1. ரோஹித் சர்மா: 90*
2. இயன் மோர்கன்: 86
3. ஆரோன் பின்ச்: 82

இந்த 6 சிக்ஸர்களையும் சேர்த்து சர்வதேச ரி20 கிரிக்கெட்டில் அதிக சிக்ஸர்கள் அடித்த துவக்க வீரர் என்ற நியூசிலாந்தின் மார்ட்டின் கப்டில் சாதனையையும் தகர்த்துள்ள ரோஹித் சர்மா புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

1. ரோஹித் சர்மா:162*
2. மார்ட்டின் கப்டில்: 161
3. பால் ஸ்டெர்லிங்: 122
4. ஆரோன் பின்ச்:116
5. எவின் லெவிஸ்:111

ஏற்கெனவே 4 சதங்கள் அடித்திருந்த ரோஹித் சர்மா இதையும் சேர்த்து ரி20 கிரிக்கெட்டில் 5 சதங்கள் அடித்துள்ளார். சர்வதேச ரி20 கிரிக்கெட்டில் அதிக சதங்கள் அடித்த வீரர் என்ற அவுஸ்திரேலியாவின் கிளன் மேக்ஸ்வெல், இந்தியாவின் சூரியகுமார் யாதவ் ஆகியோரின் சாதனைகளை உடைத்துள்ள ரோஹித் சர்மா புதிய உலக சாதனை படைத்துள்ளார். இதற்கு முன் மேக்ஸ்வெல், சூரியகுமார் யாதவ் ஆகியோர் தலா 4 சதங்கள் அடித்ததே முந்தைய சாதனையாகும்.

இந்தப் போட்டியில் அடித்த 129 ஓட்டங்களையும் சேர்த்து இந்தியாவின் கப்டனாக ரோஹித் சர்மா இதுவரை 1578 ஓட்டங்களை அடித்துள்ளார். சர்வதேச ரி20 கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் குவித்த இந்திய கப்டன் என்ற விராட் கோலியின் வாழ்நாள் சாதனையை உடைத்துள்ள அவர் புதிய சாதனை படைத்துள்ளார்.

1. ரோஹித் சர்மா : 1578*
2. விராட் கோலி : 1570
3. எம்.எஸ்.டோனி : 1112

சர்வதேச ரி20 கிரிக்கெட்டில் அதிக வயதில் சதமடித்த இந்திய வீரர் என்ற விராட் கோலியின் சாதனையையும் உடைத்துள்ள ரோஹித் புதிய வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

1. ரோஹித் சர்மா : 36 வருடம் 272 நாட்கள், ஆப்கானிஸ்தானுக்கு எதிராக, 2024*
2. விராட் கோலி : 33 வருடம் 307 நாட்கள், ஆப்கானிஸ்தானுக்கு எதிராக, 2022
3. சூரியகுமார் யாதவ் : 33 வருடம் 91 நாட்கள், தென்னாபிரிக்காவுக்கு எதிராக,

ரோஹித் சர்மா இதுவரை ரி20 கிரிக்கெட்டில் 5 சதங்கள் அடித்துள்ளார். இந்த 5 சதங்களில் 3 சதங்களை கப்டனாக பதிவு செய்துள்ளார். சர்வதேச ரி20 கிரிக்கெட்டில் அதிக சதங்களை அடித்த கப்டன் என்ற பாகிஸ்தானின் பாபர் அசாம் உலக சாதனையையும் ரோஹித் சர்மா சமன் செய்துள்ளார்.

சமீபத்தில் பதவி விலகிய பாபர் அசாமும் ரி20 கிரிக்கெட்டில் பாகிஸ்தானின் கப்டனாக 3 சதங்கள் அடித்துள்ளார்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 19.01.2024 அன்று வெளியிடப்பட்டது.